<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் நாள் புதன்கிழமை

*<u>இ.ம.எண். 332/2020 In அசல் வழக்கு எண்: 51/2019</u>*

சுந்தரி ......மனுதாரர்- பிரதிவாதி

-எதிர்-

சிவகாமசுந்தரி ....... எதிர்மனுதாரர்-வாதி

மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 08.12.2021-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சுகுமாறன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ராமதாஸ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-</u>*

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கு 51-2019 வழக்கில் பிரதிவாதியான இந்த மனுதாரருக்கு எதிராக இம்மனுவின் எதிர்மனுதாரர் வழக்கு சொத்து அவருக்கு உரிமையானது என்று விளம்புகை செய்ய கோரியும் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை அவரிடம் ஒப்படைக்க கோரியும் தீர்ப்பாணை வேண்டியுள்ளதாகவும், இவ்வழக்கு கோப்பில் எடுக்க தகுதியற்ற ஒன்று என்றும், மனுதாரரை வழக்கு சொத்திற்கு முற்றிலும் புதியவர் என்றும் தனக்கு வழக்கு சொத்தில் எவ்வித அனுபவமும் உரிமையும் இல்லை என குறிப்பிட்டுள்ளது தவறு என்றும் வாதி வழக்கு சொத்தினை 7.1.2011ல் செட்டில்மென்ட் பத்திரம் மூலம் பெற்றுள்ளதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் மனுதாரர் வழக்கு சொத்தினை அதற்கு முன்பாகவே 28.6.2014ல் கிரயம் பெற்றுள்ளார் என்றும், வழக்கு சொத்திற்கான பட்டா, சிட்டா, அடங்கல் மனுதாரர் பெயரில் உள்ளதாகவும் மனுதாரரே தீர்வை வரி செலுத்தி

வருவதாகவும், வாதி தனக்காதரவாக ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும், விளம்புகை பரிகாரம் கோரும் வாதி அதற்கு ஒரு செட்டில்மென்ட் பத்திரத்தின் நகலை மட்டுமே தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்தை அபகரிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என்றும் வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலம் ஏற்படாத ஒன்று என்றும், வழக்கு சொத்து மனுதாரரின் முழு அனுபவத்திலும் பாத்தியத்திலும் எவ்வித இடையூறுமின்றி தன் சுவாதீனத்தில் உள்ள நிலையில் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் அத்துமீறி பிரவேசிக்க முயன்றார் என குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், அத்துமீறி பிரவேசிக்க முயன்றால் அது தொடர்பாக காவல் நிலையத்தில் மனுதாரர் ஏன் புகார் அளிக்கவில்லை, முந்தைய அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், வழக்கு சொத்தில் மனுதாரர் 2018ம் ஆண்டு ஜனவரி மாதத்தின் துவக்கத்தில் அத்துமீறி பிரவேசித்ததாக குறிப்பிடும் வாதி அதே 2018ம் வருடம் அக்டோபர் மாதம் 30ம் தேதி வழக்குரையில் கையொப்பமிட்டதாக குறிப்பிட்டு நீதிமன்றத்தில் இவ்வழக்கினை 26.2.2019ல் தாக்கல் செய்துள்ள நிலையில் எவ்வகையான நடவடிக்கை எடுத்தார் என்றும் அவ்வாறு நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்பதற்கு எவ்வித விளக்கத்தையும் குறிப்பிடவில்லை என்றும், வாதியின் வழக்குரை வழக்கு மூலம் இல்லை என்ற காரணத்திற்காக வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. *<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-</u>*

இந்த எதிர்மனுதாரரின் சகோதரர் ஒரு சண்முகவேல் என்பவர் உரிமையாளர் என்றும், எதிர்மனுதாரர் பெயரில் உள்ள அன்பினால் எதிர்மனுதாரர் பெயருக்கு ஒரு 7.1.2011 தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தினார் என்றும், செட்டில்மென்ட் ஆவணமானது நடைமுறைக்கு வந்தது என்றும், இம்மனுதாரர் வழக்கு சொத்தில் 2018 ஜனவரியில் அத்துமீறினார் என்றும், எனவே எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு சொத்தில் உரிமையை விளம்புகை செய்ய கோரியும், மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட கட்டுமானத்தை நீக்கி சொத்து ஒப்படைவு செய்யவும், தான் வழக்கு தாக்கல் செய்ததாகவும், வழக்குமூலம் தவறானது என்ற அடிப்படையில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்ததாகவும், வழக்குரையை பரிசீலித்தால் மனுதாரர் கோரிய காரணத்திற்காக வழக்குரையை நிராகரிக்கப்பட வேண்டியதா என தெரிய வரும் என்றும், வழக்கில் முரண்பட்ட கேள்விகளுக்கு இந்த நிராகரிப்பு மனுவில் தீர்வு காண இயலாது என்றும் அசல் வழக்கின் விசாரணையிலேயே தெரிய வரும் என்றும், வாதிக்கு செட்டில்மென்ட் ஏற்பட்டதை ஒப்புகொண்டும் வேண்டுமென்றே சொத்தை அபகரிக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரருக்கு கூடிவரக்கூடிய கட்சி இல்லை என்றும், எனவே மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடிக்குரியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

4. இருதரப்பிலும் சாட்சி விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.12 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.த.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பு வாதங்கள் மற்றும் கோப்புகளை பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரரின் சகோதரர் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள அன்பினால் எதிர்மனுதாரர் பெயருக்கு ஒரு 7.1.2011 தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தினார் என்றும், செட்டில்மென்ட் ஆவணமானது நடைமுறைக்கு வந்தது என்றும், இம்மனுதாரர் வழக்கு சொத்தில் 2018 ஜனவரியில் அத்துமீறினார் என்றும், எனவே எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு சொத்தில் உரிமையை விளம்புகை செய்ய கோரியும், மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட கட்டுமானத்தை நீக்கி சொத்து ஒப்படைவு செய்யவும், மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி வழக்கு சொத்தினை 7.1.2011ல் செட்டில்மென்ட் பத்திரம் மூலம் பெற்றுள்ளதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் மனுதாரர் வழக்கு சொத்தினை அதற்கு முன்பாகவே 28.6.2014ல் கிரயம் பெற்றுள்ளார் என்றும், வழக்கு சொத்திற்கான பட்டா, சிட்டா, அடங்கல் மனுதாரர் பெயரில் உள்ளதாகவும் மனுதாரரே தீர்வை வரி செலுத்தி வருவதாகவும் வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என்றும் வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலம் ஏற்படாத ஒன்று என குறிப்பிட்டு பிராதினை நிராகரிக்க இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

7. மேற்படி மனுவை பரிசீலணை செய்வதற்கு முன்பு கட்டளை 7 விதி 11-ல் சொல்லப்பட்டுள்ள சட்ட வகைமுறையை அறிதல் அவசியமாகிறது. அதன்படி

"<u>வழக்குரையை நிராகரித்தல்:-</u>

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு வழக்குரை நிராகரிக்கப்படுதல் வேண்டும்:

(அ) ஒரு வழக்குமூலத்தையும் வெளிப்படுத்தாவிடத்து:

(ஆ) கோரப்பட்ட பரிகாரம் குறை மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் அம்மதிப்பீட்டைத் திருத்தும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து, வாதி அவ்வாறு செய்யத் தவறுகிறவிடத்து

(இ) கோரப்பட்ட பரிகாரம் உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆனால் வழக்குரையானது குறைவாக முத்திரைவில்லை ஒட்டப்பட்ட தாளின்மீது

எழுதப்பட்டிருக்கிறவிடத்தும், நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் தேவைப்படும் முத்திரைத்தாளைக் கொடுக்கும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து வாதி அவ்வாறு செய்யத்தவறுகிறவிடத்தும்:

(ஈ) உரிமை வழக்கானது சட்டம் எதனாலும் தடை செய்யப்பட்டிருப்பதாக வழக்குரையிலுள்ள உரையிலிருந்து தெரியவருகிறவிடத்து:

(உ) இரட்டைப் படிகளில் தாக்கல் செய்யப்படாதிருக்கும் போது,

(ஊ) வாதி விதி 9 இன் வகையங்களை கடைப்பிடிக்கத் தவறியிருக்கும் போது

வரம்புரையாக: மதிப்பீட்டைத் திருத்துவதற்காகவோ அல்லது தேவையான முத்திரைத்தாளைக் கொடுப்பதற்காகவோ நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலமானது நீட்டிக்கப்படுதல் ஆகாது: நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மதிப்பீட்டைத் திருத்துவதற்கு அல்லது, நிலவரத்திற்கேற்ப, உரிய முத்திரைத்தாளைக் கொடுப்பதற்கு, அசாதாரணத் தன்மையதான காரணம் எதனாலும், வாதி தடை செய்யப்பட்டிருந்ததாகவும் அத்தகைய காலத்தை நீட்டிக்க மறுப்பதானது வாதிக்குக் கடுமையான அநீதியை விளைவிக்கும் என்பதாகவும் அந்த நீதிமன்றம் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காகத் திருப்தி கொண்டலான்றி."

என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், சிபிசி கட்டளை 7 விதி 11 ல் குறிபபிட்டுள்ள 6 காரணங்களுக்காக மட்டுமே ஒரு வழக்குரையை நிராகரிக்க முடியும்,

அதன்படி இந்த அசல் வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்ற காரணத்திற்காக இவ்வழக்குரை நிராகரிக்கப்பட வேண்டியதா என்பதை ஆராய்கையில், வழக்குரை ஒன்றை நிராகரிக்கப்பட வேண்டும் எனில் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் மட்டுமே தொடர்புடையது என்பது நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்பு சட்ட நெறியாகும். வழக்குரையின் சங்திகளின் படி

வழக்கு சொத்து ஆதியில் ஒரு சாமிக்கண்ணு என்பவருக்கு பாத்தியமானது என்றும், சாமிக்கண்ணு அவருடைய மகள் வயிற்று பேரனான சண்முக வேல் என்பவருக்கு வழக்கு சொத்தை பொறுத்து 14.12.1986ல் ஓர் உயில் எழுதி வைத்ததாகவும், உயில் ஏற்படுத்தப்படும் போது சண்முக வேலுவின் சகோதரரான கார்த்திகேயன் பிறக்கவில்லை என்றும், காத்திகேயன் பிறந்த பிறகு வழக்கு சொத்தில் பேரன்கள் என்ற முறையில் பாகம் பிரிபடாத சொத்தில் சண்முகவேலுக்கும் கார்த்திகேயனுக்கும் சொத்தில் தலா அரை பாகங்கள் ஒதுக்கப்பட்டது என்றும், வாதி சண்முக வேலுவின் சகோதரி என்றும், வாதியின் மீது உள்ள அன்பினால் வழக்கு சொத்தை பொறுத்து 7.1.2011ம் தேதியிட்ட செட்டில்மென்ட் ஆவணம் மூலம் கொடுத்ததாகவும், பிரதிவாதிக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றும் வழக்கு சொத்திற்கு பிரதிவாதி அந்நியர் என்றும், பிரதிவாதி வழக்கு சொத்தை கிரயம் கேட்டு வாதி மறுக்கவே வழக்கு சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிக்க முயல்வதாகவும், வழக்கு சொத்தில் வாதியின் உரிமையை விளம்புகை செய்ய

கோரியும், பிரதிவாதியிடமிருந்து சொத்தை வாதியிடம் ஒப்படைக்க கோரி சொத்து சுவாதீனத்திற்கும், பிரதிவாதியால் வழக்கு சொத்தில் ஏற்பட்டுள்ள கட்டுமானத்தை அகற்ற கோரியும், வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி வழக்கு சொத்தினை 7.1.2011ல் செட்டில்மென்ட் பத்திரம் மூலம் பெற்றுள்ளதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் மனுதாரர் வழக்கு சொத்தினை அதற்கு முன்பாகவே 28.6.2004ல் கிரயம் பெற்றுள்ளார் என்றும், வழக்கு சொத்திற்கான பட்டா, சிட்டா, அடங்கல் மனுதாரர் பெயரில் உள்ளதாகவும் மனுதாரரே தீர்வை வரி செலுத்தி வருவதாகவும் வழக்கிற்கு வழக்குமூலம் கிடையாது என்றும் வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலம் ஏற்படாத ஒன்று என குறிப்பிட்டு பிராதினை நிராகரிக்க இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்கையில் வழக்கு சொத்து ஆதியில் சாமிக்கண்ணு என்பவருக்கு பாத்தியமாக இருந்து அவர் அவருடைய பேரனான சண்முக வேல் என்பவருக்கு வழக்கு சொத்தை 14.12.1968ல் உயில் மூலம் கொடுத்ததாகவும், சண்முகவேல் அவருடைய சகோதரியான இந்த வழக்கு வாதிக்கு வழக்கு சொத்தை 7.1.2011ல் செட்டில்மென்ட் செய்து கொடுத்ததன் அடிப்படையில் வழக்கு சொத்தில் தனக்குள்ள உரிமையை விளம்புகை செய்ய கோரியும், சொத்து சுவாதீனத்திற்கும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் வாதி 7.1.2011ல் செட்டில்மென்ட் பெறுவதற்கு முன்னரே 28.6.2004ல் கிரயம் பெற்றதாக குறிப்பிட்டு வழக்கை நிராகரிக்க கோரியிருந்தாலும், மனுதாரர் எதிர்மனுதாரர் பிராதில் சொல்லிய வழக்கு மூலம் தவறு என்று கூறியுள்ளாரே தவிர வழக்கு மூலம் சொல்லப்படவில்லை என்று கட்சி செய்யவில்லை. வழக்கு சொத்தை உண்மையில் எதிர்மனுதாரர் 7.1.2011ம் தேதியிட்ட செட்டில்மென்ட் மூலம் பெற்றாரா அல்லது அதற்கு முன்னரே 28.6.2004ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் மூலம் மனுதாரர் கிரயம் பெற்றாரா என்பது குறித்தும் அசல் வழக்கின் விசாரணையிலேயே தீர்வு காண இயலும். மேலும் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்து வருவதை காட்ட மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்குசொத்தின் உரிமைமூலம் குறித்து அசல் வழக்கின் விசாரணையில்தான் முடிவு செய்ய இயலும்.

14. மனுதாரர்- பிரதிவாதி இம்மனுவில் கூறியுள்ள கூற்றுகள் குறித்து இம்மனுவில் முடிவு செய்ய இயலாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பிரதிவாதியின் எதிர்வழக்குரை சங்கதிகளின் உண்மைத் தன்மை குறித்து தற்சமயம் முடிவு செய்ய இயலாது அசல் வழக்கின் விசாரணையின் போது மட்டுமே அது குறித்து தீர்மானிக்க முடியும். இந்த மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள அசல் வழக்கை முன்னிடுவதற்கு எதிர்மனுதாரர் வழக்குரையில் கூறியுள்ள வழக்கு மூலம் முற்றிலும் தவறானது மற்றும் மேற்படி வழக்கு இந்நீதிமன்ற

விசாரணைக்கு எந்தவிதத்திலும் தகுதியற்ற ஒன்று என்ற கூற்று ஏற்புடையதாக இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

இறுதியில். மனுதாரா் தாக்கல் செய்த இந்த இடைமனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்ல சொல்ல அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-V.Geetha)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

<u>மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணம் :</u>

| | | |
|---|---|---|
| ம.த.சா.1 | 28.6.2004 | பிரதிவாதி பெயரிலுள்ள பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரம் அசல் |
| ம.த.சா.2 | | பதிவிறக்கம் செய்யபட்ட பட்டா பட்டா எண்.440 |
| ம.த.சா.3 | | அடங்கல்- அசல் |
| ம.த.சா.4 | | நமூனா ரசீது அசல் |
| ம.த.சா.5 | | அ.வ.51-2019ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| ம.த.சா.6 | | அ.வ.51-2019ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| ம.த.சா.7 | 15.3.2020 | வழக்கறிஞர் அறிவிப்பு நகல் |
| ம.த.சா.8 | 17.5.2020 | மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவா்களுக்கு அனுப்பி புகார் நகல் |
| ம.த.சா.9 | | வில்லங்க சான்று பதிவிறக்க நகல் |
| ம.த.சா.10 | | வாதி அளித்த முதன்மை பிரமாண வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் |
| ம.த.சா.11 | | வாதி சாட்சி-2 முதன்மை பிரமாண வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் |
| ம.த.சா.12 | | மனுதாரா் அளித்த 17.12.2020 தேதியிட்ட புகார் மனு நகல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணம்:</u>

| | | | |
|---|---|---|---|
| எ.ம.த.சா.1 | - | 7.1.2011 | செட்டில்மென்ட் பத்திர அசல் |

(Sd/-V.Geetha)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.